செ.வெ.எண்: 34/ஜூன் நாள்: 16.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட வருவாய் கிராமங்களுக்கான 2-ஆம் நாள் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாயக் கணக்கு தணிக்கை முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (16.06.2016) பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான 2-ஆம் நாள் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை முகாமில் வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த தணிக்கை முகாமில் பொதுமக்களிடமிருந்து மொத்தம் 40 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இம்மனுக்களில் தகுதியான 20 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1425-ஆம் பசலி ஆண்டு வருவாய் தீர்வாய கணக்கு தணிக்கை முகாம், வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நேற்று (15.06.2016) துவங்கியது. இம்முகாமானது 15.06.2016 முதல் 17.06.2016 வரையிலும் மற்றும் 21.06.2016 முதல் 24.06.2016 வரை (7 நாட்கள்) நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற 2-ஆம் நாள் முகாமில் பரமக்குடி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், முதியோர் உதவித் தொகை, பட்டா மாற்றம், புதிய குடும்ப அட்டை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வேண்டி மொத்தம் 40 மனுக்களை வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள்.

மனுக்களை பெற்றுக் கொண்ட வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், அம்மனுக்களை ஆய்வு செய்து உடனடி தீர்வு காண சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். அதனடிப்படையில் பெறப்பட்ட 40 மனுக்களில் தகுதியான 20 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள 20 மனுக்கள் மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் பரமக்குடி வட்டாட்சியர் திரு.செய்யது முகமது, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.டி.மீனாட்சி சுந்தரம், மண்டல துணை வட்டாட்சியர்கள் திரு.மீனாட்சி, திருமதி.வசுமதி, துணை வட்டாட்சியர் (தேர்தல்) திரு.சேகர், வட்ட வழங்கல் அலுவலர் திரு.சுவாமிநாதன் உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**